**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**

**OS No. 54/2025**

**வாதி தரப்பு 3 வது சாட்சி பவுல் வின்செண்ட்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

## Chief Examination of PW.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பவுல் வின்செண்ட் | வயது | : | 40 |
| தந்தை பெயர் | : | குழந்தை | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | குரும்பூண்டி | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |

நாள் : 27.02.2026

முதல் விசாரணை

நான் 01.08.2024 ஆம் தேதி முதல் கந்தர்வக்கோட்டை தாலுகா குரும்பூண்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள நாட்டாணி கிராமத்தினைச் சேர்ந்த வசந்தா என்பவருக்கு நான் தான் இறப்புச்சான்று வழங்கினேன். மேற்படி வசந்தாவின் கணவர் பெயர் கண்ணன். வசந்தாவிற்கும் கண்ணனிற்கும் வாரிசுகள் யாரும் இல்லை. நான் கிராமத்தில் விசாரணை செய்ததில் மேற்படி விபரம் தெரிய வந்தது. வசந்தாவின் சகோதரிகளான அழகு, ரூபாவதி, அஞ்சம்மாள், பேபிராணி ஆகியோர் தான் தற்போது அவரது வாரிசுகள் ஆவார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) இறந்து போன வசந்தா என்பவரை எங்கு திருமணம் செய்து கொடுத்தார்கள் என்ற விபரத்தை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன், தஞ்சாவூரில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். எனது விசாரணையில் வசந்தாவிற்கும் கண்ணனிற்கும் வாரிசுகள் யாரும் உள்ளார்களா என்று தெரிந்து கொண்டேனா என்றால் அவர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லை. இறந்து போன வசந்தாவிற்கு யார் யார் வாரிசுகள் என்பதை நான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அழகு, ரூபாவதி, அஞ்சம்மாள், பேபிராணி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள்.

**மறுவிசாரணை— இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.27 15:59:39 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**